I Additional District Court, Thoothukudi.

O.S.No.127/2021 நாள் : 28.07.2025 வா.சா.1– திரு.கண்ணன்.

குறுக்கு விசாரணை :–

தாவா சொத்தினை பிரதிவாதி ஒருவருக்கு அடமானம் வைத்திருந்தார். அதற்கான நகல் எடுத்து பார்த்தோம். ஒப்பந்தம் முடித்து ஐந்து மாதம் கழித்து நகல் எடுத்துப் பார்த்தோம். சுரேஷ் சந்த் என்பவருக்கு ரூபாய் 19 லட்சத்திற்கு அடமானம் எழுதப்பட்டிருந்தது. அடமானம் மீட்கப்பட்டதா என்று இன்றுவரையில் எனக்கு தெரியாது. அடமானம் இருந்ததாகவும், ஐந்து மாதம் கழித்து அடமானம் குறித்து தெரிய வந்ததாகவும், எனக்கு தெரியவந்தது சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல பிரதிவாதி மேற்படி சுரேஷ் சந்த் என்பவருக்கு கடன் எதுவும் திருப்பி கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன்தான் ரூபாய் 3 லட்சம் வாங்கினார் என்றும், அதற்கு பிணையமாக கிரைய ஒப்பந்தத்தை நான் தயார் செய்து கொண்டேன் என்றும் சுரேஷ் சந்த் என்பவர் சொத்தை அடமானம் பெற்றதாகவும், அந்த அடமான வகைக்கு பிரதிவாதி என்னிடம் முன்பணமாக பெற்றதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1–ல் முதல் தாளின் பின்பகுதியில் எழுதப்பட்ட மேற்குறிப்பில் சொத்து குறித்த அடமானம் இருப்பதாகவும், அடமானத்தை மீட்டு கிரையம் முடித்து கொடுப்பதாகவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மேற்குறிப்பை சின்ன சுப்பையா என்பவர் எழுதினார். பிரதிவாதி வீட்டில்தான் மேற்குறிப்பு எழுதப்பட்டது. அதை எழுதும்போது சின்ன சுப்பையா, பிரதிவாதி, சங்கரநாராயணன், ஒரு முத்துப்பாண்டி, ராமமூர்த்தி ஆகியோர் இருந்தார்கள். 08.08.2020 அன்று மேற்படி மேற்குறிப்பு எழுதப்பட்டது. அதை எழுதும்போது காலை சுமார் 11 மணியிருக்கும். சின்ன

சுப்பையா அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறார். சங்கர நாராயணன் முகராக தொழில் செய்கிறார். மேற்படி முத்துப்பாண்டியும், ராமமூர்த்தியும் முகராக தொழில் செய்கிறார்கள். மேற்படி முத்துப்பாண்டி, சங்கரநாராயணன் ஏற்கனவே சொத்துக்களை வாங்கி கொடுத்துள்ளார்கள். முத்துப்பாண்டியை 15 ஆண்டுகளாக தெரியும். சங்கர நாராயணனை 6, 7 ஆண்டுகளாக தெரியும். சின்ன சுப்பையாவை 2020ல்தான் தெரியும். சின்ன சுப்பையா ஆசிரியராக வேலை செய்து கொண்டு முகராகவும் தொழில் செய்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. சின்ன சுப்பையாவை நான் இதுவரை நேரில் பார்த்ததில்லை. கைபேசியில் பேசியிருக்கிறேன். வா.சா.ஆ1ல் முதல் தாளின் பின்பகுதியில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பு பிரதிவாதிக்கு சம்பந்தப்பட்டதல்ல என்றும், அதை எனக்கு வேண்டியவர்கள் மூலமாக நானே உற்பத்தி செய்து கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. 08.08.2020ல் பிரதிவாதி என்னிடம் ரூபாய் ஒரு கோடி வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிப்பதற்காக 08.08.2020–ல் ரூபாய் ஒரு கோடி கொடுத்ததாகவும், 05.03.2020ல் ரூபாய் ஐம்பது லட்சம் கொடுத்ததாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஒப்பந்தம் ரூபாய் ஐம்பது லட்சத்தை கொடுக்கும்போது எழுதப்பட்டது. அதை எழுதும்போது பிரதிவாதியின் மகன், சின்ன சுப்பையா, மேற்படி மூன்று முகவர்களும் இருந்தார்கள். அதை எழுதும்போது காலை 7 மணியிருக்கும். சின்ன சுப்பையா விருதுநகர் அருகில் உள்ள சூலக்கரையில் ஆசிரியராக பணியில் இருக்கிறார். கோவில்பட்டிக்கும் சூலக்கரைக்கும் சுமார் 35 முதல் 40 கிமீ தூரம் இருக்கும். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன தேதியிலும், சொன்ன விதத்திலும் வா.சா.ஆ1 எழுதப்படவில்லை என்றும், பிரதிவாதியும் அதில் கையொப்பமிடவும்

இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ1க்காக நான் பிரதிவாதியிடம் வெற்று முத்திரைத்தாள் மற்றும் வெற்றுத் தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு எனக்கு வேண்டிய நபர்களை வைத்துக் கொண்டு கிரைய ஒப்பந்தமாக உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 படி கால அவகாசம் ஆறு மாதங்கள் கொடுக்கப்பட்டது. மேற்படி மேற்குறிப்பில் இரண்டு மாதங்கள் வாசகம் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பெரிய தொகை கொடுத்ததால் அவ்வளவு கால அவகாசம் கொடுக்க முடியாது என்றும், ஒரு மாதம்தான் கொடுப்பேன் என்றும் சொன்னதால் மேற்படி திருத்தம் ஏற்பட்டுள்ளது. அந்த திருத்தத்திற்கு யாரும் கையொப்பம் செய்யவில்லை. அடமானத்தை மீட்க பிரதிவாதிதான் கால அவகாசம் கேட்டதாக மேற்படி மேற்குறிப்பில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கொரோனா கால கட்டத்தில் பிரதிவாதிக்கு எதிராக போலீசில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், கோவில்பட்டி காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் கொடுத்தேன். இரண்டு புகாரையும் கோவில்பட்டி துணை கண்காணிப்பாளர்தான் விசாரித்தார். போலீசில் பிரதிவாதி சொத்தை எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் பணம் கொடுக்க வேண்டுமென்றும் பேசினோம் என்றால் சரியல்ல. போலீசார் உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை அணுகுமாறு சொன்னார்களா என்றால் இல்லை. என் புகாரின் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் என்னை அழைத்து விசாரித்தார்கள். எனக்கும், பிரதிவாதிக்கும் அழைப்பாணை அனுப்பியிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் விசாரணைக்கு வரவேண்டுமென்று அனுப்பப்பட்ட அழைப்பாணை என்றால் சரியல்ல. குற்றப்பிரிவில் விசாரணைக்கு போனேன். குறிப்பிட்ட

தேதிக்கு விசாரணைக்கு வரவேண்டுமென்று எனக்கு அழைப்பாணை வந்தது. அழைப்பாணை என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். 23.09.2021 அன்று ஆஜராகவேண்டுமென்று அழைப்பாணை வந்தது. அன்று விசாரணைக்கு போனேன். நான் பிரதிவாதி பெயரில் மட்டும்தான் புகார் கொடுத்தேன். புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புகாரை 1ம் வாதி சார்பில் நான்தான் கொடுத்தேன். பிரதிவாதி முன்பணத்தை பெற்றுக் கொண்டு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றும், பணத்தை திருப்பி கேட்டபோது பிரதிவாதி மறுத்து என்னை மிரட்டி அனுப்பியதாகவும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் போலீசாரை வைத்து பிரதிவாதியை மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது. பிரதிவாதியிடம் காவல்நிலையத்தில் நான் கொடுக்காத பணத்தை திருப்பி கேட்டும், கிரையம் எழுதிக் கொடுக்கச் சொல்லியும் மிரட்டினேன் என்றால் சரியல்ல. உண்மையில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தும் எண்ணம் இல்லை என்பதால்தான் முன்கூட்டியே வில்லங்கம் எடுத்துப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த சமயத்தில் வில்லங்கம் பார்க்கமாட்டோம். சொத்தையும் அளக்க மாட்டோம். கிரைய சமயத்தில்தான் வில்லங்கம் எடுத்துப்பார்ப்போம். சொத்தை அளப்போம். நான் சொல்வதுபோல் ஒரு செண்ட் மதிப்பை ரூபாய் 1,17,000/– நிர்ணயம் செய்ததாகவும், வா.சா.ஆ 1 கிரைய ஒப்பந்தம் சரியான பிரதிபலனுக்கு எழுதிக் கொடுத்தாகவும் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மோசடி கிரைய ஒப்பந்தப்படி நான் தயாராகவும், விருப்பமாகவும் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒப்புக் கொள்ளாத வா.சா.ஆ 1 கிரைய ஒப்பந்தப்படி நான் 04.09.2020 தேதிக்குள் கிரையம் முடித்துக்

கொள்வதாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தம் போட்டது கொரோனா ஆரம்ப காலம். வழக்கு தாக்கல் செய்த காலம் கொரோனா காலம்தான். போலீசில் புகார் கொடுத்து அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்ததும், இந்த வழக்கு தாக்கல் செய்ததும் கொரோனா காலம்தான். கொரோனா காலம் என்பதால் பிரதிவாதிக்கும் பாதிப்பு உண்டு என்றால் சரிதான். 2022 ஏப்ரலில் பாக்கி கிரையத் தொகையை நீதிமன்றத்தில் செலுத்திவிட்டேன். அதனால் வழக்கு தாக்கல் செய்யும் தேதியில் நான் தொகை எதுவும் செலுத்தவில்லை. கிரைய ஒப்பந்தம் உண்மை என்று காட்டிக் கொள்வதற்காக மேற்படி தொகையை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. குறிப்பிட்ட காலத்திற்குள் தொகையை நீதிமன்றத்தில் கட்டாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையான கிரைய பேச்சு இல்லை என்பதால்தான் ஆதியில் 1ம் வாதி பணம் கொடுத்தாகவும், பின்னிட்டு நானும், 2ம் வாதியும் சேர்ந்து பணம் கொடுத்ததாகவும் திருத்தம் செய்து வழக்கை நடத்துகின்றோம் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு சம்பந்தப்பட்ட வங்கி கணக்கு புத்தகம், வங்கி கணக்கின் கணக்கு பட்டியல் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 7 முதல் 12 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாதவை என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.07.28 18:47:15 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.